# "பதினெண்சித்தர்கள் படைத்த இந்து மதத்தை உலகுக்கு அறிமுகப் படுத்துவதே எமது நோக்கம்"



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
அவர்கள் அருளிய



# இந்து வேதம்



தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

ஆவணி மாதம் (September 2016)
மெய்யான இந்துமத ஆண்டு 43,73,117

காணிக்கை: ரூ.10 /-

# உள்ளுறை

1. பதினெண்சித்தர்கள் படைத்த இந்து மதத்தை உலகுக்கு அறிமுகப் படுத்துவதே எமது நோக்கம். (1985இல் குருதேவர் முசிறிச் சித்தரடியான் திரு M.R.சீனிவாசன் அவர்களுக்கு எழுதிய அஞ்சல்.)

2. சித்தர் நெறியின் புரட்சிப் பூசாவிதிகள்.

3. நிருவாண நிலையே நிவாரண நிலை. (பிச்சாடனர் சிலை பற்றிய குருபாரம்பரிய விளக்கம்.)

4. படித்தவர்களை மீண்டும் படிக்க வைக்க வேண்டும். (குருதேவரின் அருளார்ந்த அறிவுரையின் ஒரு பகுதி.)

5. யார் பெரியார்? யாருக்குப் பெரியார்? ........ (சித்தர் காகபுசுண்டர் அவர்களின் குறிப்புக்களிலிருந்து ஒரு பகுதி.)

6. பழந்தமிழர்களின் பூணூல் அணியும் முறை. (கோலும் குடுவையுமாக ஆடு மாடு மேய்த்துக் கொண்டு வந்த பிறமண்ணினராகிய வடஆரியர்களுக்கு பூணூல் எதற்காக என்பதே தெரியாது என்பதை விளக்கும் கட்டுரை.)

7. சுவாமி விவேகானந்தரைப் பற்றிய ஓர் ஆய்வு.

8. குரு பூசை விழா.

9. இறைச்சியும் இறைமையும்.

---

சென்னை

6/12/85

# <u>பதினெண்சித்தர்கள் படைத்த இந்து மதத்தை உலகுக்கு அறிமுகப் படுத்துவதே எமது நோக்கம்.</u>

*அன்பு நண்பர் M.R.சீனிவாசன் R.M.P. (90, தென்கள்ளர் தெரு, முசிறி P.O., திருச்சி Dt. 621211) அவர்களுக்கு,*

**குவலய குருபீடம், ஞானாச்சாரியார், ஞானத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்கள் எழுதுவது:

(1) தாங்கள் 1-12-1985இலும், 4-12-85இலும் தொடர்ந்து எழுதிய இரண்டு அஞ்சல்களும் கிடைத்தன. மட்டற்ற மகிழ்ச்சி. இது போன்ற ஆர்வலர்களின் ஆதரவான அஞ்சல்தான் எமக்கு மருந்தாக, விருந்தாக இருக்கின்றன. தேவர் அமுதும், தேவேந்திரன் பதவியும் கிடைத்தால் கூடத் தேவையில்லை; <u>எமது தாய்மொழியான அமுதத் தமிழுக்குத் தொண்டு செய்தால் போதும் என்று வாழும் வாழ்வே எமது வாழ்வு</u>.

(2) பழைய திருமாளிகை, பாழடைந்த கோயில், நிலவறைப் புதையல், ஆழ்கடல் முத்து... முதலியவை போன்று பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதம் இருக்கிறது. இதனைப் புதுப்பித்து அல்லது வெளிக் கொணர்ந்து அல்லது அழகுபடுத்திச் செயலாக்கி உலகுக்கு அறிமுகப் படுத்த வேண்டும் என்பதே எமது நோக்கம்; எமது பரம்பரையின் போக்கு.

யாம் 18 ஆண்டுகள் பயின்றும், 18 ஆண்டுகள் முயன்றும் கற்றவை, நோற்றவை, உற்றவை, பெற்றவை ... விற்பனைச் சரக்குகள் அல்ல. <u>இவை கற்பகோடி காலங்கள் கடந்தும் வாழும் வல்லமை</u>

<u>பெற்றவை.</u> இவற்றை விதையாகப் பயன்படுத்தி எமது தாயக மக்களை நாற்றங்காலாக்கி அருட்பயிர்த் தொழிலை ஆரம்பித்து உள்ளோம் யாம். இதில் பங்கு பெற அனைவரையும் அழைக்கிறோம்! அழைக்கிறோம்!! அழைக்கிறோம்!!! உண்மையான உழைப்பாளிகள் எம்மோடு உழைக்க முன்வரட்டும்! முன்வரட்டும்!! முன்வரட்டும்!!!

(3) பேரன்பு உடைய தாங்கள் தங்களுடைய மக்கட் செல்வங்களையே குருகாணிக்கையாக வழங்கி இருப்பதற்கு நன்றி! மகிழ்ச்சி! பாராட்டு! இதுபோல் குடும்பத்திற்கு ஒரு குழந்தையை குருகாணிக்கையாக வழங்கும் பொற்காலம் வந்தால்தான் தமிழருக்கு, திராவிடருக்கு, தென்னிந்தியர்க்கு, இந்தியர்க்கு, உலக மக்களுக்கு படிப்படியாக நன்மைகளைச் செய்ய முடியும்!! முடியும்!! முடியும்!!

ஏனெனில் எமக்கு முழுநேர ஊழியர்கள் நிறைய பேர் தேவை. அவர்களை யாம் கூடுமானவரை எமக்குச் சமமாக, எமது பதிலியாக, எமது வாரிசாக, அருளாட்சித் தத்துவத் தலைவர்களாக, அருட்பணி நாயகர்களாக உருவாக்கிடுவோம்! உருவாக்கிடுவோம்!! உருவாக்கிடுவோம்!!!

<u>அப்படி உருவாகும் அருளுலக இளவரசர்கள்தான் அருளுலக இருள்களையும், இருட்டடிப்புக்களையும், இடர்ப்பாடுகளையும், இன்னல்களையும், இல்லாமைகளையும், இயலாமைகளையும், ஒடுக்கங்களையும், நடுக்கங்களையும், தேக்கங்களையும், ஏக்கங்களையும், தாகங்களையும், பசிகளையும் போக்குவார்கள்! நீக்குவார்கள்! அகற்றிடுவார்கள்!</u>

(4) வானத்துக்கு ஒரே ஒரு ஆதவன் இருப்பது போல், <u>அந்தந்த வட்டாரத்துக்கு தங்களைப் போல் ஒரே ஒரு தனிநபர் ஆர்வத்தோடு செயல்பட்டால் போதும். இரண்டாயிரம் ஆண்டுகளாக வீழ்த்தப் பட்டும், தாழ்த்தப் பட்டும், ஆழ்த்தப் பட்டும் சிதைந்து,</u>

சீரழிந்து கிடக்கும் இந்துமதத்தை செப்பனிட்டு அரியணையில் அமர்த்தி விடலாம்.

அருளை அனுபவப் பொருளாக அடையவும், பிறர்க்கு வழங்கவும் உதவக் கூடிய மதக் கலைகளும், அறிவியல் கலைகளும் (Religious Arts and Sciences) ஏராளமாக நம்மிடம் இருக்கின்றன. இவற்றைத் தாராளமாக உலக மக்களுக்கு வழங்கும் கொடை உள்ளமும், வள்ளல் பண்பும் நம்மிடம் இருக்கிறது. அதனால் நாம் ஏராளமான அருளாளர்களை நாடு, மதம், மொழி, இனம், ... என்ற வேறுபாடுகளைக் கடந்து உலகெங்கும் உருவாக்கிடலாம்! உருவாக்கிடலாம்!! உருவாக்கிடலாம்!!! அவற்றின் மூலம் உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டினை உருவாக்கிடலாம்.

அதன் பயனாக அல்லது அறுவடையாக உலகச் சமத்துவச் சகோதரத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கப் பட்டு விடும். அப்போது அரசாங்கம் என்ற ஒன்றே இருக்காது. சமுதாய அமைப்பே அனைத்தையும் நிர்வாகம் செய்யும் நிறுவனமாக இருக்கும். இதுவே பதினெண்சித்தர்கள் இந்துமதம் என்ற பெயரால் வழங்கியுள்ள தனிமனித வாழ்வியல் தத்துவம்; குடும்ப வாழ்வியல் தத்துவம்; சமூக வாழ்வியல் தத்துவம்; அரசியல் வாழ்வியல் தத்துவம். இம்மாபெரும் தத்துவத்தை விளக்கி உரைப்பதன் மூலம்தான் வளர்ச்சி அடையச் செய்ய முடியும்.

எனவேதான் யாம் மலைமுகடுகளிலும், அடர்காடுகளிலும், குகைகளிலும், குக்கிராமங்களிலும், ஆற்றுப் படுகைகளிலும், கடலிடைத் தீவுகளிலும் எம்மை மறந்தும், துறந்தும், திரிந்தும், அலைந்தும் நன்கு சிந்தித்து அனைத்து வகையான செயல்திட்டங்களையும் வகுத்தோம். அவற்றை உலகெங்கும் பரந்து கிடக்கும் தமிழர்களிடையில் விவரித்துத் **தோற்றோம்**.

அவற்றின் பிறகு ஒளிவில் ஒடுக்கத்தில் அமர்ந்து அக புற ஒளிகளை உருவாக்கி நேரடியான அ.வி.தி. பணியைத் துவக்கினோம். அதற்கென குருகுலத்தை (மதுரை மாவட்டத்தில் மேலூர் கொட்டாம்பட்டி - காரியேந்தல்பட்டியில்) அமைத்தோம். அவற்றிற்கு துணையாக நாடு முழுவதும் 40க்கும் மேற்பட்ட அ.வி.தி. நிலையங்களை நிறுவினோம். ஆயிரம் ஆயிரம் அடியான்களையும், அடியாள்களையும், அடியார்களையும் உருவாக்கினோம். இருந்தும் தாயகத்தில் துக்க நிலையும், ஏக்க நிலையும் நீடித்திருக்கிறது. என்ன செய்வது? <u>என் நம்பிக்கையே தாயகத்தின் தன்னம்பிக்கை.</u> <u>இவை அனைவர்க்கும் புரியும் காலம் எக்காலமோ!?</u>

(5) தங்களைப் போல் சிலரையாவது முசிறி வட்டாரத்திலோ, திருச்சி மாவட்டத்திலோ உருவாக்கிக் கொடுத்திடல் வேண்டும் என்பதே எமது வேண்டுகோள், விருப்பம், ஆணை; இதனைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுங்கள். <u>**நமது அச்சிட்ட கருத்துக்களையும், கையெழுத்துப் பிறதிக் கருத்துக்களையும் நன்கு பரப்பிடுங்கள்**</u>. தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வுக்கும், மற்ற அருளாளர்களுக்கும் ஏற்பட்ட தோல்விகள் போல் எனக்கும் தோல்விகள் ஏற்பட்டிட வேண்டாம்.

தந்தை பெரியார் உருவாக்கிக் கொடுத்த செல்வாக்கையும், விழிச்சியையும், எழிச்சியையும், ஒற்றுமையையும், கூட்டுறவையும், மொழி உணர்வையும், இன உணர்ச்சியையும் .... அரசியல் வாதிகள் தங்கள் தங்களின் சுயநல வெறிகளுக்காகப் பயன்படுத்தித் தீர்த்து விட்டார்கள். இன்றைக்கு மீண்டும் புதிதாக சுயமரியாதை உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, தன்மான உணர்வு, இன உணர்வு, மொழி உணர்வு முதலியவைகள் நன்கு வேலி கட்டி விவசாயம் செய்ய வேண்டும். <u>**இது எண்ணப் புரட்சியாக, சிந்தனைப் புரட்சியாக, கருத்துப் புரட்சியாக மலர வேண்டும்**</u>. <u>அப்பொழுதுதான் பல</u>

**<u>ஆயிரம் ஆண்டுகளுக்கு கட்டமைப்புக்களோடு நிலையான தன்னாட்சி உடைய அருட்பேரரசு உருவாகும்.</u>**

(6) நாம் அனைத்து கருவறைகளையும், சுடுகாடுகளையும், புதைகாடுகளையும் விரைவில் விடுவிப்பதன் மூலம்தான் உலகம் முழுவதும் இன விடுதலைகள், மொழி விடுதலைகள் பிழைத்துத் தழைக்கச் செய்ய முடியும். எனவே, **கற்றோரும், மற்றோரும் நம்மைப் புரிந்து உற்றாராக மாறிட அருட்பணி ஆற்றிடும் புதியவர்களை உருவாக்கித் தருக! உருவாக்கித் தருக!! உருவாக்கித் தருக!!!**

இதற்குப் 10 நகல்கள் அனுப்புக. தாங்கள் அனுப்பிய அனைத்து நகல்களும் கிடைத்தன. நன்றி.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்**

**6/12/85**

<u>நகல் தயாரித்தவர்</u>:-

முசிறி வட்டம் இ.ம.இ. கொள்கை பரப்புச் செயலாளர்,

M.R.சீனிவாசன் R.M.P. 90, தென்கள்ளர் தெரு, முசிறி P.O., திருச்சி Dt.

**//உண்மை நகல்//**

**//மூலம்: முசிறி சித்தரடியான் திரு M.R.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

6-6-85
செம்பியம், சென்னை-11.

# <u>சித்தர் நெறியின் புரட்சிப் பூசாவிதிகள்</u>

1. பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் பங்கு பெற்று அவர்களுடைய துன்பங்களுக்கும், தொல்லைகளுக்கும், ஏக்க ஏமாற்றங்களுக்கும், கவலைகளுக்கும், வருத்தங்களுக்கும், அறியாமைகளுக்கும், புரியாமைகளுக்கும், சிக்கல்களுக்கும், இழப்புக்களுக்கும் மருந்தாக, பரிகாரமாக ஏதாவது உதவியைச் செய்வதன் மூலம்தான் மத மறுமலர்ச்சிப் பணியில் ஈடுபடுபவர்கள் தங்களுக்கென்று செல்வாக்கையும், ஆதரவையும் பெற்றிட முடியும். அதாவது, அருட்பணி விரிவாக்கத் திட்டச் (அ.வி.தி.) செயல்வீரர்கள் என்று புறப்படுபவர்கள் <u>பொதுமக்களுடைய வாழ்க்கையில் இரண்டறக் கலந்து அவர்களின் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும், அன்பையும், ஆதரவையும் பெற்றேயாக வேண்டும்</u>.

இதற்காக இவர்கள் பதினெண்சித்தர்களின் பூசாவிதியின்படிப் பூசைகளைச் செய்து தங்களை அருள் மழையாக, அருட் கடலாக, அருள் ஊற்றாக, அருள் ஆறாக, அருட் கேணியாக, அருள் ஏரியாக ... உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான், இவர்கள் பொதுமக்களின் அகவாழ்விலும், புறவாழ்விலும் அருட்பயிரை விளைவித்து அனைத்து வகையான பசிகளையும், தாகங்களையும், சோகங்களையும், வேகங்களையும், ஏக்கங்களையும், தேக்கங்களையும், தேவைகளையும் தீர்த்து வைக்க முடியும்! தீர்த்து வைக்க முடியும்! தீர்த்து வைக்க முடியும்! அதாவது மக்களுக்குள் மக்களாக இருந்துதான் அருட்புரட்சி செய்ய வேண்டுமே தவிர, மக்களுக்கு

வெளியேயிருந்து, விலகி இருந்து மக்களுக்கு வழிகாட்ட, வழித்துணையாக இருக்க முயன்று அருட்புரட்சியைச் செய்ய முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!

எனவேதான், பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மக்களோடு மக்களாகப் பழகி, மக்களிடையிலிருந்து புதிய புதிய அ.வி.தி. செயல்வீரர்களையும், வீராங்கனைகளையும் உருவாக்கி அருட்புரட்சிப் பணியில் ஈடுபடுகிறார்கள். மக்களோடு மக்களாக இருப்பதால் இவர்களுக்கு மிகப் பெரிய, உயரிய, போலியான வறட்டுக் கவுரவ சர்வாதிகாரத் தலைமைப் போக்கு அமைவதில்லை.

2. அருட்புரட்சி செய்யப் போகும் அ.வி.தி. செயல்வீரர்கள் மிகத் தெளிவோடும், துணிவோடும், பணிவோடும், கனிவோடும் சித்தர்களின் மறை, முறை, நெறி, வேத விதிகளைக் கையாள வேண்டும். சித்தர்கள் அனைவருமே 'மிதியடி' அல்லது செருப்பு அல்லது பாதுகை அல்லது பாதுகாவல் காலணி ... என்ற பெயரில் தங்களுடைய காலில் மரக்கட்டையாலும், மரப்பட்டையாலும், மர இலைகளாலும், விலங்கின் தோல்களாலும், உலோகங்களாலும் காலுக்கும், நிலத்துக்கும் நேரடித் தொடர்பில்லாமல் தடுப்பு ஒன்று அமைத்துக் கொண்டுதான் அருட்பணியாற்றி யிருக்கிறார்கள்.

எனவே, <u>தூய்மையான அல்லது அவ்வப்போது சுத்தப் படுத்தப்பட்ட செருப்புக்களை அணிந்து கொண்டே அ.வி.தி. ஊர்வலங்கள், விழா நிகழ்ச்சிகள், பூசைகள், அருட்கணிப்பு, அருள்வழங்கல் முதலியவை செய்யப்படல் வேண்டும்.</u> இதே சமயத்தில், உலகியலுக்கு உட்பட்டு வழிபாட்டு நிலையங்களுக்கும், பிறரின் பூசை நிகழ்ச்சிகளிலும் செருப்புக் காலோடு செல்ல வேண்டாம்...... என்று அறிவிப்பு வழங்கப் படுகிறது.

3. பூசைப் படையலுக்குத் தயாரிக்கப்படும் உணவுகளை அடிக்கடி தின்று சுவை பார்த்துத்தான் தயாரிக்க வேண்டும். படையல் போட்ட உணவைச் சாப்பிட்டு விட்டுத்தான் பூசை செய்ய வேண்டும்.

சாப்பிடாமல் பட்டினி கிடந்து பூசை செய்யும் எந்தப் பூசைமுறையையும் சித்தர் நெறி கூறவில்லை.

4. இதேபோல் **குருதிப்பலி, இறைச்சியுணவுப் படையல்** முதலியவையில்லாமல் எந்தவிதப் பூசை முறையையும் சித்தர்நெறி கூறவில்லை.

5. பெண்ணைத் தீட்டு என்றோ, விதவை என்றோ, ஈனப்பிறவி என்றோ கருதி எந்தப் பூசையிலிருந்தும் விலக்கி வைக்கக் கூடாது. பெண்ணே அனைத்துப் பூசைகளுக்கும் கரு, குரு, திரு.

6. சித்தர்நெறிப்படி பெண்ணை மறந்தோ, துறந்தோ, மறுத்தோ, வெறுத்தோ, பதுக்கியோ, ஒதுக்கியோ பூசை செய்யுமாறு எந்த விதியும் கிடையாது. அதாவது, இல்லற இன்பம் துய்த்துக் கொண்டே பூசை செய்யலாம் என்பதே சித்தர்களின் விதி. ஏனெனில், பெண் வழியாகத்தான் அனைத்து சத்திகளையும், சித்திகளையும் பெற முடியும் என்பதுதான் சித்தர் நெறி. சித்தர் நெறியின்படி பெண்ணின்பத்தைத் துறந்து வாழுபவர்கள் எந்தவிதமான சத்தியையோ, சித்தியையோ எளிதில் பெற முடியாது.

7. சித்தர் நெறிப்படி மொட்டையடித்துக் கொள்வதும், காவி கட்டிக் கொள்வதும், இல்லற வாழ்வை மறுப்பதும் மிகப்பெரிய குற்றம், பாவம், தண்டனைக்குரியது.

**குறிப்பு**:- ஞானசித்தர், புத்தர், தீர்த்தங்கரர், ... எனப்படுபவர்கள் விதிவிலக்காகக் கருதப்படுவார்கள். ஆனாலும், இவர்கள் திருமணம் என்ற ஒன்றினை ஒரு நொடிப் பொழுதாவது ஏற்றேயாக வேண்டும் என்ற கண்டிப்பு சித்தர் நெறியில் இருக்கிறது.

8. பிறரை நம்ப வைப்பதற்காக சித்துக்கள் செய்வதை சித்தர்நெறி வன்மையாகக் கண்டிக்கிறது. "சித்துக்கள் தானே வெளிப்படலாமே தவிர விரும்பி முயன்று வெளிப்படுத்தக் கூடாது!!" என்பதே சித்தர் நெறி. அதாவது, சித்துக்களை அத்தவர்களே = சித்துக்களை அடக்கி வென்றவர்களே சித்தர்கள் என்பதே உண்மை.

9. சித்தர்கள் தங்களுடைய பூசாவிதிகளின் மூலம் ஆண், பெண், சிறியவர், பெரியவர், ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி, ஆண்டான், அடிமை, ... என்ற வேறுபாடின்றி அனைவருமே சமம் என்ற பேருண்மையை விளக்கியிருக்கிறார்கள்.

குறிப்பு:- சித்தர்கள் யார் வேண்டுமானாலும் எந்தப் பூசையை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற பொதுவிதியை வகுத்திருக்கிறார்கள். ஆனால், "திருவருளை விட குருவருள்தான் இன்றியமையாதது" என்பதை மிகமிகத் தெளிவாக வலியுறுத்தி இருக்கிறார்கள்.

(a) **குருவழியாகவே அனைத்தையும் பெறுதல் திருநிலை தரும்.**
(b) **குருவே அனைத்துக்கும் கரு, உரு, திரு.**
(c) **குருவே பேரின்ப வீட்டின் திறவுகோல்.**
(d) **குருவில்லா வித்தை பாழ்.**
(e) **குருவால் தொட்டுக் காட்டப்படாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது.**
(f) **குருவும் திருவும் ஒன்றே.**
(g) **குருவே எல்லாம்.**
(h) **குருவே அனைத்துக்கும் வழியாக, வழித்துணையாக, வழிப்பயனாக, வழிகாட்டியாக விளங்குகிறார். ......**

இவை போன்ற எண்ணற்ற குருபாரம்பரிய, குருவாசக, குருவாக்கிய ... கருத்துக்கள் குருவின் பெருமையை விளக்குகின்றன.

10. பால் என்பதும் குருதியின் பதப்படுத்தப்பட்ட வடிவம்தான். அதாவது, 'பால் என்பது ஒருவகைக் குருதிதான்' என்ற கருத்து அனைவருக்கும் புரிய வைக்கப்பட்டால் குருதிப் பலியைப் பற்றிக் குறை கூறுபவர்கள் இருக்க மாட்டார்கள்.

11. **'அனைத்து வகையான பயிரினங்களும், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அசைய முடியாத உயிரினங்களே!'** என்ற உண்மை அனைவருக்கும் புரிய வைக்கப்பட்டால் இறைச்சியுணவுப் படையலைப் பற்றிக் குறை கூறுபவர்களோ, வருத்தப்படுபவர்களோ இருக்கவே மாட்டார்கள்! மாட்டார்கள்! மாட்டார்கள்!

12. தமிழ்மொழி ஒன்றுதான் அண்டபேரண்டங்கள் அனைத்தையும் இணைக்கின்ற, அடக்கியாளுகின்ற அருளாட்சி மொழி என்ற பேருண்மை அனைவருக்கும் புரிந்து விட்டால் அருளுலக இருள்களும், இன்னல்களும் முழுமையாக அகன்று விடும், அகற்றப் பட்டு விடும்.

13. வழிபாட்டு நிலையங்களிடையேயும், வழிபடு நிலையினர்களிடையேயும், அருளுக்கு முயற்சிப்பவர்களிடையேயும், அருளுலக அரசர்களான சித்தர்களிடையேயும் பல்வேறு வகையான, படிப்படியான தர, திற, உர, மற, அற, வீர, தீரப் பிரிவுகள் உண்டு! உண்டு! உண்டு! ஆனால், இவர்கள் அனைவருமே அருட்பயிர் விளைவிப்பவர்களே! அனைத்து வகையான உயிரினங்களையும் காப்பவர்களே! என்ற பேருண்மை புரிந்து விட்டால் **பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதம்** அல்லது உண்மையான இந்துமதம் அல்லது சத்தியமான இந்துமதம் மறுமலர்ச்சி பெற்றுவிடும்! பெற்றுவிடும்! பெற்றுவிடும்!

14. பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத்திற்குக் கேடும், கெடுதலும் செய்பவர்கள்தான் சமூக விரோதிகளாகவும், சமூக துரோகிகளாகவும் இருக்கிறார்கள்.

**இந்தப் பதினான்கு(14) கருத்துக்களையும் அ.வி.தி. செயல்வீரர்களும், வீராங்கனைகளும் மனித நலத்துக்காக சொல்வடிவிலும், செயல்வடிவிலும் உலகுக்கு வழங்க வேண்டும்** என்ற அறிவிப்பு அருளாணையையே ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் வன்ம ஆண்டு பால்குட விழா பாராட்டு நன்றிச் செய்தியாக வழங்குகிறார்.

ஓலைநாயகம் இரா.சீனிவாசன் BBA.

**[உண்மை நகல்]**

**<u>நகல் நல்குபவர்</u>: கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு சித்தரடியார் சீ.மணி.**

# நிருவாண நிலையே நிவாரண நிலை

நிரு + ஆணம் (ஆவணம்) = நிருவாணம்.
(நிரு = நிலையாக அல்லது இயற்கையாக;
ஆவணம் => ஆணம் = உறுதி நிலை.)

நிருவாண நிலை = பிறந்த மேனியோடு இருத்தல் எனும் பொருள்படும் அழகிய தமிழ்ச் சொல்லே **நிருவாணம்**.

நீவு + ஆரணம் => நிவாரணம்;
(நீவு = மென்மையாகத் தடவிச் சரி செய்தல் = எதையும் மென்மையாகப் பக்குவப் படுத்தல்;
ஆரணம் = அழகுபடவும், வலிமை மிகுந்திருக்கும் படியாகவும் செய்திடல்.)
= எல்லாவிதமான குறைகளுக்கும், தொல்லைகளுக்கும் மென்மையான அன்பு வழியில் பரிகாரம் செய்தல் எனும் பொருள் தரும் அழகிய தமிழ்ச் சொல்லே நீவு + ஆரணம் = நிவாரணம்.

இந்த சொல்லாராய்ச்சி விளக்கத்தோடு பிச்சை இடும் ஆண்டவர் (ஆண்டை) => பிச்சாண்டவர் என்ற சொல் குறிக்கும் தத்துவமும், சிலையும் பற்றி இங்கு சுருக்கமான விளக்கம் தரப்படுகின்றது. ஏனெனில் குருபாரம்பரியத்தில் ஆரம்பக் காலத்திலிருந்து எண்ணற்ற கருத்து விளக்கங்கள்; செயல்நிலை விளக்கங்கள் வழங்கப் பட்டு வருகின்றன. விரிவஞ்சிச் சுருக்கமான விளக்கம் இங்குத் தரப்படுகிறது.

கலியுகம் பிறந்து 1359 ஆண்டுகளுக்குப் பிறகுதான் பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் இமயமலையின் கைபர், போலன் கணவாய்களின் வழியாக ஆடுமாடுகளை ஓட்டிக்

கொண்டு மேய்ச்சல் நிலம் தேடி ஆட்டுத் தோலால் ஆன கோவணத்தையும், குடுவையையும் உடமையாகக் கொண்டு; கையில் கோலும், தலையில் குடுமியுமாக இந்தியாவிற்குள் வந்தார்கள். இந்த நாகரீகமற்ற நாடோடிக் கும்பல்களால்தான்; இந்திய நாட்டின் நாகரீகத்தின் காப்பகமாக விளங்கிய **'அருட்பா நகரம்'** (அரப்பா நகரம்), **'மோகம் சிதரு நகரம்'** (மொகஞ்சதாரோ நகரம்) என்ற இரண்டு நகரங்களும் அழித்தொழிக்கப் பட்டன.

அதற்கு மேல் இவர்கள் இந்த நாட்டிலேயே நிலையாக வாழ வேண்டுமென்பதற்காக; இந்த நாட்டவர்களின் மொழியான அமுதத் தெய்வத் தமிழ்மொழியின் அடிப்படையில் தங்களுடைய எழுத்து வழக்கற்ற பேச்சு மொழியை இணைத்து ஒரு புதிய மொழியை உருவாக்க விரும்பினர்கள். அதற்கு அப்பொழுதிருந்த சித்தர்கள் உதவி செய்து 'தமிழுக்குச் சமமான மொழி' எனும் பொருள்பட **[சம** எனும் தமிழ்ச் சொல்லும், **கிருதம்** (= செய்யப்பட்டது) எனும் வடஆரியப் பேச்சு மொழிச் சொல்லும் இணைந்து **சம + கிருதம் = சமசுக்கிருதம்]** சமசுக்கிருதம் எனும் மொழியை உருவாக்கிக் கொடுத்தார்கள். அத்துடன் தமிழ்மொழியிலிருந்த மத இலக்கிய இலக்கணங்களில் பெரும்பாலானவற்றை இந்தச் சமசுக்கிருத மொழியில் மொழி பெயர்த்துத் தந்தார்கள்.

ஆனல், பேராசை பிடித்த இந்த வடஆரியர்கள் தமிழ்மொழியிலுள்ள அருளூறு இலக்கிய இலக்கணங்களில் பெரும்பாலானவற்றை பொருள் தெரியாமலே அப்படியே மொழித்திருத்தம், மொழியாக்கம் (Transliteration and Translation) செய்து பதினெண்சித்தர்களின் சித்தர் நெறியான சீவநெறியெனும் **இந்துமதத்**தையே தங்களுக்குரிய *ஹிந்து மத*மாக்கிக் கொண்டார்கள்.

குறிப்பாக 'பூசாமொழி' என்ற பெயரில் பூசைகள் ஓதுவதற்காகவும், பிற நடைமுறைகளுக்காகவும் எழுதப் பட்ட அல்லது வழங்கப்

பட்ட அனைத்து வகையான அருளூறு வாசகங்களையும் சமசுக்கிருத மொழியில் மொழித் திருத்தம் செய்து மாபெரும் தோல்வியைப் பெற்றிட்டார்கள். எனவேதான் **சமசுக்கிருத மொழியில் செய்யப்படும் பூசைகளின் மூலம் யாருக்கும் சத்தியோ, சித்தியோ கிடைத்ததாக வரலாறு இல்லை. இன்னும் சொல்லப் போனால் சமசுக்கிருத மொழியில் பூசை செய்கின்ற யாருக்கும் அருளும் வருவதில்லை, மருளும் வருவதில்லை**.

இப்படிப் பிருமணர்கள் சமசுக்கிருத வெறி கொண்டு செயல்பட்டுத்தான் உயிர்த் துடிப்பும், பயன்மிகுதியும் உடைய பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமத**த்தை உயிரற்ற, பயனற்ற *ஹிந்துமத*மாக்கி விட்டார்கள். அந்தத் தீய விளைவுகளுள் ஒன்றுதான் பிச்சாடனர் சிலையின் தத்துவ விளக்கம் புரியாமல் போனது.

I. பிச்சை + ஆளுநர் => பிச்சாடனர் = பிச்சை வழங்குவதில் வல்லமையுடையவர்.

II. பிச்சை + ஆண்டை => பிச்சாண்டை = பிச்சை வழங்கும் கலைக்கு ஆண்டை (தலைவர்).

III. பிச்சை + ஆண்டவர் => பிச்சாண்டவர் = பிச்சை வழங்கும் கலையில் முழுமை பெற்றவர்.

**விளக்கம்**:- இப்படியாக அருட்பிச்சையும், பொருட்பிச்சையும்; விண்ணுலக இன்பமும், மண்ணுலக இன்பமும்; அக இன்பமும், புற இன்பமும் வழங்குகின்ற வல்லமையைப் பெற்ற முழுமுதற் பரம்பொருளாக விளங்குகின்ற பதினெண்சித்தர்களின் தலைவராக இருக்கின்ற 'சீவனரின்' (சிவனரின்) அருள் வழங்கு வடிவமே இந்தப் பிச்சாடனரின் வடிவம்.

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் இந்துமத மறுமலர்ச்சிக்காகவும், **மெய்யான**

**இந்துமத**த்தின் விழிச்சி நிறை செழிச்சிக்காகவும் வார்த்திட்ட எண்ணற்ற சிலைகளுள் ‘ஐந்து வகையான பிச்சாடனர்கள்’ என்று வார்த்த ஐந்து வகையான சிலைகளுள் ஒன்றே இது.



இவை கைகளின் நிலைகளாலும், கைகளிலுள்ள ஆயுதங்களின் நிலைகளாலும், தோற்றப் பொலிவாலும் ஐந்து வகையான மாறுபட்ட நிலைகளை உடையவையாகும். நகாரச் சிலை, மகாரச் சிலை, சிகாரச் சிலை, வாகாரச் சிலை, யகாரச் சிலை எனும் ஐந்து வகை பிச்சாடனர்கள் வார்க்கப் பட்டார்கள். அதில் இது மகாரச் சிலை என்ற பிரிவைச் சேர்ந்ததாகும். விரிவஞ்சி இவ்வளவில் நிறைவு செய்கிறோம்.

**குறிப்பு:-** குருவும் மாணுக்கனும் நிருவாண நிலையில் இருந்துதான் அருள் உலக நாளோலக்கத் திருவோலக்க ஆட்சி நிகழ்த்த முடியும் என்பதே இச்சிலையின் விளக்கம். திரிசூல நிலையும், அருட்கை நிலையும், முகமும் மகார நிலையை விளக்குகின்றன.

**ஆதாரம்**:- பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரியம்; கருவூர்த் தேவரின் குருபாரம்பரியம். மூவரின் இலக்கிய பாரம்பரியங்களிலும் இப்பிச்சாடனரின் விளக்கங்கள் காணப்படுகின்றன.

**//மூலம்: 26.12.1986இல் வெளியாகிய குருதேவர் அறிக்கை 36.//**

# படித்தவர்களை மீண்டும் படிக்க வைக்க வேண்டும்

“..... ..... ..... ஆண்டுக்கு இதுபோல் ஓரிரு நிகழ்ச்சிகளில் மட்டுமே கலந்து கொண்டு சொற்பொழிவு நிகழ்த்தும் பழக்கத்தை உடையவன் நான். எனவே, எனது சொற்பொழிவு நீங்கள் வழக்கமாகக் கேட்டுக் கேட்டுப் பழகிப்போன ஒன்றாக இருக்காது. அது, உங்களில் சிலர் சிலவாறாக எண்ணுதற்கு இடம் கொடுக்கலாம். இருப்பினும். நான் எனக்கேயுரிய முறையிலே ஒரு சில சிந்தனைகளை உங்களைச் சிந்திக்க வைப்பதற்காக கூற விழைகின்றேன்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளில் சொற்பொழிவு நிகழ்த்துவது சற்று சிக்கலான, ஒரு தொல்லை மிகு செயல்தான். ஏனெனில் இங்கு கூட்டத்தில் இளஞ்சிறுவர்கள், இளைஞர்கள், நடுத்தர வயதினர், பெரியவர் ..,.. என்று பல பருவத்தினர் இருப்பதோடு, மாணவர் சமுதாயம், ஆசிரியர் சமுதாயம், பொது மக்கள் .... என்று மூன்று பெரும் அறிவியல் பிரிவுகள் இருக்கின்றது. இந்த அறிவியல் பிரிவுகள் ஒன்றோடொன்று பல்வேறு வகைகளிலும், வளர்ச்சிகளிலும், முதிர்ச்சிகளிலும், ஆர்வங்களிலும் மிகுந்த ஏற்ற இறக்கங்களையும், மாறுபாடுகளையும், வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும் உடையவை. எனவே, நான் யாருக்காகப் பேசுவது? யார் தெரிந்து கொள்ள? யார் புரிந்து கொள்ள? யார் உணர்ந்து கொள்ள? யார் தெளிந்து கொள்ள? யார் ஒப்புக் கொள்ள? யார் ஏற்றுக் கொள்ள? யார் போற்றிப் பாராட்டப் பேசுவது? ...... என்ற வினாக்கள் விடை காண முடியாத வினாக்களாகி என்னை மலைக்க வைத்து மலையாக்கி இருக்கின்றன ........

நண்பர்களே! எனது கல்லூரி மாணவர்கள் வகுப்பறையில் சித்தரின் பேச்சுக்களைக் கேட்டிட்டோமே! பொதுமேடையில் சித்தரின் பேச்சு எப்படியிருக்கிறது என்று கேட்டுத்தான் பார்ப்போமே ..... என்று திரளாக வந்திருக்கிறார்கள் என்பதால், அவர்களையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கும் என் பேச்சு விருந்தாக வேண்டுமே என்ற பொறுப்பில் என் நிலையை மலையாக! மலைப்புக்கு மலையாக ஆக்கிக் கொண்டுள்ளேன்.

நான் பங்கு பெறுகின்ற இந்த நிகழ்ச்சி ஒரு கல்விச் சாலையின் ஆண்டு நிறைவு விழா என்பதால் எனது எண்ண ஓட்டத்தை ‘கல்வி’, ‘கல்விச்சாலை ஆண்டு’, ‘கல்விச்சாலை ஆண்டு நிறைவு’, ‘கல்விச் சாலை ஆண்டு நிறைவு விழா’ ...... என்பனவற்றை ஒட்டியதாக்கிக் கொள்ள முயலுகின்றேன்.

ஆர்வமிக்க மாணவ நண்பர்களே! இந்தக் கல்விச் சாலை ஆண்டு நிறைவு விழா ஆண்டு தோறும் நடந்து கொண்டேதான் இருக்கும். மாணவர்களும் ஆண்டுதோறும் நிறைவு விழாவில் பங்கு பெற்று வெளியேறிக் கொண்டேதான் இருப்பார்கள்! எனவே, இந்த விழாவுக்கு நிறைவு ஏற்பட்டு விழா முடிவாகப் போவதில்லை! ஆண்டுக்கு நிறைவு ஏற்பட்டு கல்வியாண்டு தொடராமல் இருக்கப் போவதில்லை. இந்தக் கல்விச் சாலைக்கு நிறைவு ஏற்பட்டு இனிமேல் பணியாற்றத் தேவையில்லை என்ற முடிவு நிலை ஏற்படப் போவதில்லை! ...... எனவே நிறைவு என்ற சொல் இங்கு முழுமையான முற்றுப் பெற்ற பொருளைத் தரவில்லை .... தர முடியவில்லை.

அதாவது முல்லையே நீ மலராதே! நீ மலர்ந்தது போதும்! மணம் பரப்பியது போதும்! உன்னைக் கண்டு மகிழ்ந்தது போதும்! சூடி மகிழ்ந்தது போதும்!......

முழுநிலவே! நீ ஒளிராதே! நீ ஒளி பரப்பியது போதும்! உன்னொளி கண்டும் உண்டும் மகிழ்ந்தது போதும்!

தென்றலே! நீ தவழ்ந்தது போதும்! நீ தவழ்ந்து வந்து குளுமையூட்டி இனிமையளித்தது போதும்! நாங்கள் மகிழ்ந்தது போதும்! ..... என்று இயற்கையின் நிகழ்ச்சிகளில் நிறைவு கண்டு யாரும் அதற்கு முடிவுகட்டுவது இல்லை.

இதைப்போலத்தான் கல்விச்சாலையின் பணியிலே நிறைவு கண்டு யாரும் முடிவு கட்டுவது இல்லை. ஆண்டு தோறும் இக்கல்விச் சாலையில் தங்களின் படிப்பை நிறைவு செய்து கொண்டு வெளியேறும் மாணுக்கர்களுக்காக ஆண்டு நிறைவு விழா நிகழ்ந்து கொண்டேதானிருக்கும். அப்படித் தொடர்ந்து ஆண்டு நிறைவு விழா நிகழ்ந்து வந்திட்டால்தான் மாணவர்கள் கல்வியில் ஆர்வமும், அக்கரையும் வளரப் பெற்றவர்களாக ஆகிடுவார்கள்.

ஆனுல் ஏட்டுப் படிப்பில் நிறைவு பெற்றவர்கள் ஆண்டு தோறும் கல்விச் சாலைகளிலிருந்து வெளியேறிக் கொண்டே இருந்தும் கூட, நாட்டு நடப்பில் நிறைவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதா? என்ற விஞவை எழுப்பி விடை காண முற்படும் போதுதான், இந்த நிறைவு விழாக்களின் உண்மையான தன்மைகள் நுண்மையாக விளங்குகின்றன.

***“ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.”***
***“பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது.”***

என்ற மூதுரைகள் இத்திருநாட்டின் கல்விச் சாலைகளில் கற்றுத் தேர்ந்து ஏட்டுப் படிப்பில் நிறைவு கண்டவர்களால் நாட்டிலுள்ள குறைகளைக் குறைத்து நிறைவுகளை நிறைவு செய்ய முடியாது! முடியவில்லை! ..... என்ற பேருண்மையினை விளக்குகின்றன. இந்த நிலை இன்று நேற்று ஏற்பட்ட ஒன்றல்ல! ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இத்திருநாட்டில் கல்வியாலும், கல்விச்சாலையாலும், கல்வி கற்றவர்களாலும் யாதொரு நன்மையும் ஏற்படவே இல்லை. ...... அதை, முதுபெரும் மூதாட்டி ஔவையார்,

**‘கல்லாதாரே நல்லார்’**

என்று கூறிச் சென்றுள்ளதால் உணரலாம். இப்படி நான் கூறுவதைக் ‘கல்வி கற்பதே தவறு’ என்று நான் கூறுவதாக யாரும் தவருக எடுத்துக் கொள்ளக் கூடாது. நெடுங்காலமாகவே இத்திருநாட்டில் கல்வித் துறை பொதுமக்களின் நேரடி வாழ்க்கைக்குப் பயன்படாத ஒன்ருகவே இருந்து வந்திருக்கின்றது என்ற மாபெரும் கருத்தைத்தான், பேருண்மையைத்தான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன் நான்.

எனதருமை நண்பர்களே! இந்த ஊரில் இந்தக் கல்விச் சாலே தோன்றிப் பல ஆண்டுகளாகியுள்ளன. இந்தக் கல்விச் சாலே இதுவரை பல்லாயிரக் கணக்கான மாணவர்களே உருவாக்கியிருக்கிறது. இதில் எத்தனே மாணவர்கள் ஏட்டிலும் நாட்டிலும் நிலேயான புகழைத் தேடியுள்ளார்கள்? ..... ..... .....”

**//மூலம்: 26.8.1985இல் வெளியாகிய குருதேவர் அறிக்கை 20.//**

## குருபாரம்பரியச் செய்திகள்

தமிழ்க் குழந்தைகள் யவனம், சோனகம், பிராகிருதம், சமசுக்கிருதம் ..... முதலிய பிற மொழிகளேப் படிக்கும் வரை இனத்துக்கும், மொழிக்கும், நாட்டுக்கும் துரோகிகள் தோன்றிக் கொண்டுதான் இருப்பார்கள். பதினெட்டாண்டுப் பருவம் கடந்த பிறகே பிறமொழி கற்கும் முறைதான் கற்புக் கெடாமல் இனப்பற்றும், பாசமும், ஒற்றுமையும் பெற்று வாழச் செய்யும் தமிழர்களே.

தமிழின விரோதிகளின் வெற்றியும், வலிமையும் தமிழினத் துரோகிகளின் பேராசையிலேயே உள்ளன. எனவே, துரோகிகளே ஒழிப்பதே விரோதிகளே அழிக்கும் பணியென உணர்ந்து செயல்படலே தேவை.

**//மூலம்: குருதேவர் அறிக்கை 1984ஆம் ஆண்டு மலர்.//**

# யார் பெரியார்? யாருக்குப் பெரியார்?.....

**சித்தர் அரசயோகிக் கருவூரார் எழுதிய நூலிலிருந்து ....!**

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் ஈடு இணையில்லாத இரண்டாவது தலைவர் காக்கா வழியன் பண்ணையாடி முடிகணம் சித்தர் காகபுசுண்டர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் 1952ஆம் ஆண்டு 'குலக் கல்வித் திட்டத்தை' எதிர்த்துப் போராடிய, தாழ்த்தப் பட்ட இனத்தின் தன்னிகரில்லாத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. பற்றிக் கூறிய ஒரு சில வாசகங்களை அப்படியே குறிப்பிடுகிறோம்.

"..... இந்தியத் துணைக்கண்டம் முழுவதுமுள்ள தாழ்த்தப் பட்ட மக்களைப் பாதுகாப்பதற்காக அந்த இனத்திலேயே தோன்றிய அந்த இனத்தின் தலைவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி அரசியல் சட்டத்திலேயே ஒரு சில வழிவகைகளைச் செய்திட்டார். ஆனால், அவை பெருமளவு பயன்பட முடியாதபடிச் செய்திட்டார்கள் இந்தப் பிருமணர்கள்.

இதில் மிகப் பெரிய பிருமணச் சமூக வீரர்களாக அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும், V.V.சீனிவாசன் ஐயங்காரும் விளங்குகிறார்கள். இவர்கள் இருவரும் தங்களின் சட்ட அறிவின் திறமையினால் சூழ்ச்சியாக டாக்டர் அம்பேத்கார் எழுதிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் (Constitution of India) பல குறைகளைக் கண்டுபிடித்து தாழ்த்தப் பட்ட மக்கள் அவர் எதிர்பார்த்த அளவிற்கு நன்மையடைய முடியாதபடிச் செய்து விட்டார்கள். ஆனால், பெரியார் ஈ.வெ.ரா. அவர்களிடம் இவர்கள் இருவரால் ஏதும் செய்ய முடியவில்லை.

சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து; பிருமணர்கள்தான் படிக்க வேண்டும்; தாழ்த்தப் பட்டவர்கள் படிக்கக் கூடாது; படித்தாலும் அவர்களுக்கு வேலை கொடுக்கக் கூடாது; அதாவது அவர்களின் பரம்பரைத் தொழிலைத்தான் அவரவர் மேற்கொள்ள வேண்டுமென்ற *வர்ணாசிரம தர்மத்தை, சனாதன தர்மத்தை* மீண்டும் கொண்டு வந்ததைக் கண்டு; நமது சிறைக்கஞ்சாச் சிங்கம் வெண்தாடி வேந்தர் ஈ.வெ.ரா. அவர்கள் பொங்கும் கடலென மாறினார். எரிமலையாக வெடித்தார்.

'நம்மவர்கள் அனைவரும் கத்தி வைத்துக் கொள்ள வேண்டும்; பெட்ரோல் வைத்துக் கொள்ள வேண்டும்; தீப்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டும்; நான் ஆணையிட்டதும் அனைத்துப் பிருமணர்களின் வீடுகளையும் தீ வைத்துக் கொளுத்துங்கள்' - என்று இனமான மிக்க தன்மானத் தமிழர்களுக்கு அறிவிப்புச் செய்தார்.

இந்த அறிவிப்பு எல்லோருக்கும் மிகச் சாதாரணமானதாகவோ, புரிய முடியாதவையாகவோ, விளங்க முடியாதவையாகவோ இருந்திருக்கலாம். ஆனால், பிருமணர்கள் புரிந்து கொண்டார்கள்; விளங்கிக் கொண்டார்கள். <u>தங்களின் ஆரிய இனம் பூண்டோடு அழியப் போவதைத் தெளிவாக அறிந்து கொண்டார்கள்</u>. <u>தங்களின் தமிழர்கள் மீதான சூழ்ச்சிகளை, சுரண்டல்களை, மாயைகளை, ஏமாற்றுக்களை, ... வன்முறையால்தான் முழுமையாக அழித்தொழிக்க முடியும் என்பதைப் பெரியார் அறிந்து கொண்டார்</u> என்பதைப் புரிந்து கொண்டார்கள். ஓடிச் சென்று இராசகோபாலாச்சாரியாரிடம் முறையிட்டார்கள்; ஓலமிட்டு அழுதார்கள் .......”

**//மூலம்: 26.4.1986இல் வெளியாகிய குருதேவர் அறிக்கை 28.//**

# பழந்தமிழர்களின் பூணூல் அணியும் முறை

1. எள் 2. எருக்கு இலை, 3. அருகம்புல், 4. பச்சரிசி, 5. தர்ப்பைப்புல், 6. தும்பைப்பூ, 7. திருநீற்றுப் பச்சிலை இலை (துணித்தப் பச்சிலை), 8. துளசி இலை, 9. தூதுவளை இலை, 10. வில்வ இலை, 11. பொரசங் குச்சி, 12. அரசங் குச்சி, 13. ஆலங் குச்சி, 14. வேப்பங் குச்சி, 15. நாவலங் குச்சி, 16. நெல்லிக் குச்சி, 17. எட்டிக் குச்சி, 18. இச்சிக் குச்சி ஆகிய பதினெட்டுப் பொருள்களில் ஏதாவது மூன்று, ஐந்து, எட்டு, பதினாறு, பதினெட்டு என்று அவரவர் வசதிக்கேற்பப் பொருள்களைச் சேர்த்து நெருப்பு வளர்த்துப் பூணூல் அணிந்து கொள்வது எல்லாத் தமிழர்க்கும் உரிய மரபாகவே இருந்திருக்கின்றது.

ஆண்டுக்கு ஒருமுறை, இருமுறை, மூன்று முறை, நான்கு முறை, ஆறு முறை, பன்னிரண்டு முறை புதுப் பூணூல் போடுவது என்ற பழக்கம் இருந்திருக்கின்றது.

இது

1. உழவர்,
2. மாடு மேய்ப்போர்,
3. மண் குயவர்,
4. ஐந்து வகைத் தட்டார் (ஆசாறியார்),
5. வணிகர்,
6. வேடுவர்,
7. ஏடு வாசிப்போர் (புலவர்),
8. பாடுவோர்,
9. ஆடுவோர்,
10. மாணுக்கர்,

11. ஆசிரியர்,
12. நற்கடன் ஆற்றுவோர்,
13. ஈமக்கடன் ஆற்றுவோர்,
14. திருக்கோயில் பணி புரிவோர்,
15. பூசாறி,
16. நாடு காவல்புரியும் படைவீரர்,
17. அரசர்,
18. குருமார்

ஆகிய பதினெட்டுப் பேர்களுக்கும் அவரவர் வாய்ப்பு வசதி விருப்புகளுக்கேற்ப வகைப்படுத்தப் பட்டிருக்கிறது.

**"பள்ளுப் பறை பதினெட்டுச் சாதியும்**
**உள்ளம் போல் பூணூலிட உரிமையுண்டு"**

**- குருபாரம்பரியம்**

பதினெட்டு வகைச் சாதியினர், பதினெட்டு வகைப் பொருள் கொண்டு பூணூல் இட்டுக் கொள்ள வேண்டும். அவரவர் வாய்ப்பு வசதி விருப்புகளுக்கேற்ப ஓராண்டில் ஒருமுறை முதல் பன்னிரண்டு முறை வரை ஆறு வகையாகப் பூணூல் போட்டுக் கொண்டனர்.

பூணூல் போடுவதற்குப் பயன்படுத்திய பொருள்கள் அனைத்தும் தமிழ்நாட்டிற்கே சொந்தமானவை. இதற்குரிய மந்திறங்களும், மந்தரங்களும், பூசைவிதிகளும் தமிழிலேயே உள்ளன. இவற்றை மீண்டும் செயலாக்கச் சித்தரடியார்களும், சித்தரடியான்களும், சித்தரடியாள்களும் பயிற்சிகளைப் பெறல் வேண்டும்.

பிறமண்ணினர் ஆகிய பிருமணர் எனும் வடஆரியர்க்கு உரியதன்று பூணூல் அணியும் பழக்கம். **<u>பூணூல் அணியும் பழக்கம் முழுக்க முழுக்கத் தமிழர்க்கே உரியது</u>**.

ஒவ்வொரு மனிதரும் சூரியன் உதிப்பதற்கு முன்னரே எழுந்து; காலைக்கடன்களை முடித்துப் பூணூலைத் தொட்டு மந்திறங்களையும், மந்தரங்களையும் சொல்லுவதால் <u>மனிதப் பண்புகளைப் பெற்றிடுகின்றான்</u>.

அதனால், தனிமனிதன் நீதியை, நேர்மையை, உண்மையை, நன்மையை … நம்பியும், விரும்பியும் கடைப்பிடிப்பவன் ஆகிடுகின்றான்.

காலையில் ஓய்வு இல்லாத மனிதன் சூரியன் மறையும் முன்போ! அல்லது இரவுச் சாப்பாட்டிற்கு முன்போ! நீராடி விட்டுப் பூணூலைத் தொட்டுக் குறிப்பிட்ட மந்திறங்களையும், மந்தரங்களையும் சொல்லிப் பூசைகளைச் செய்ய வேண்டும்.

இவையன்றி நல்ல ஓய்வு உள்ளவன் மதியம் உச்சி வேளையில் ஒருமுறை பூணூலைத் தொட்டு மந்திறங்களையும், மந்தரங்களையும் சொல்லிப் பூசைகள் செய்ய வேண்டும்.

மாணவர், துறவி, மனைவி இழந்தவர், அறுபது வயதைக் கடந்தவர் ஆகிய நால்வர் '**நான்கு திறத்தார்**' ['நான் முறையார்', 'நான் மறையார்' என்ற பெயர்களால் மேற்குறித்த நால்வரும் குருபாரம்பரிய ஏட்டில் குறிக்கப் படுகின்றனர்]களும் ஒரு நாளைக்கு ஆறு தடவை பூணூலைத் தொட்டு மந்திறங்களையும், மந்தரங்களையும் சொல்லிப் பூசைகள் செய்ய வேண்டும்.

இப்படித் தெளிவாகப் பூணூல் அணியும் முறை, அணிபவர் தரம், செய்யும் பூசை வகைகள், இவற்றிற்குரிய மந்திறங்கள், மந்தரங்கள் … முதலிய இன்னோரன்ன பிற செய்திகள் அனைத்தும் மிகமிகத் தெளிவாக, விளக்கமாக, முறையாக, படிப்படியாக, அடிப்படைச் சான்றுகளோடு எழுத்து வடிவில் சட்டமாக இருந்தும் கூடத் தமிழர்கள் எப்படி? எப்பொழுது? எவ்வாறு? ஏமாற்றப் பட்டனர்? ஏன் தமிழர்கள் பூணூல் அணிவதைக் கைவிட்டனர்? வடஆரியர் எப்படித் தமிழர்கள் கைவிட்ட பூணூல் முறையைக் கைக் கொண்டனர்? இதனால், வடஆரியர் அடைந்த பயன்கள் யாவை? … முதலிய வினாக்களை எழுப்பி எழுப்பி விடை தேடித் தேடிச் சிந்தித்து உழன்றிட்ட நாட்கள் எண்ணிலடங்கா?

**- குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

**<u>குறிப்பு:-</u>**

மேலே கண்ட பூணூல் விளக்கத் தொகுப்பு குருதேவர் அவர்களின் பழைய அஞ்சல் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது. இதை அடிப்படையாகக் கொண்டு "பூணூல் விளக்கம்" எழுதி அனைவரும் அறியச் செய்ய வேண்டுகிறோம்.

இந்தக் குறிப்பு 4-2-1985இல் நடைபெறும் 132வது பருவபூசையில் படித்துக் காண்பிக்கப்படும்.

அன்பே சிவம்
ஓம் திருச்சிற்றம்பலம்

**நெ.சேவுகன்.**

**31-1-1985**

<u>நகலெழுதியவர்:</u>

தலைமைப் பணியாளர், சித்தரடியார்,
அனாதி சிவசத்திகள் சன்னிதானம், தெய்வீகாச்சாரியார்,
கடவுளாச்சாரியார், அருளாட்சி ஓலை நாயகம்,
சோ.இரவீந்திரன், 19/2/1985.

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: சித்தரடியார் திரு சோ. இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>சுவாமி விவேகானந்தரைப் பற்றிய ஓர் ஆய்வு</u>

**<u>சான்று:</u>** The Indian Mirror - 24-6-1899.
விவேகானந்தரைப் பேட்டி கண்டவர் 'பிரபுத்த பாரத' என்ற பத்திரிகையின் நிருபர்.
**<u>ஊன்று:</u>** 'இந்துமதம் அழைக்கிறது' - மார்ச், 1984 பக்கம்: 63,64

**நிருபர்:** ஹிந்து தர்மத்திலிருந்து திசை தவறிப் போனவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளலாமா? வருகிறவர்களுக்குச் சாதி.....?

**விவேகானந்தர்:** தானுகவே அவர்களது சாதி அமையும். புதிதாக வருகிறவர்கள் புதிய சாதி அமைத்துக் கொள்வார்கள்.

**நிருபர்:** புதியவர்களின் மண உறவு எப்படி அமையும்?

**விவேகானந்தர்:** இப்போது எப்படி நடக்கிறதோ, அதே போல்தான்; அவர்கள் தங்களுக்குள் பெண் கொடுத்து எடுத்துக் கொள்வார்கள்.

**<u>ஆய்வு:</u>** இந்து மதத்துக்குள் புதிய தெம்பும், தெளிவும், பொலிவும் ஊட்டிடும் பெரியவர்கள் காலங்கள் தோறும் தோன்றிடுகின்றுர்கள். அவர்களுள் ஒருவரே விவேகானந்தர். ஆனுல், அவரே <u>பிறமண்ணினர் ஆகிய</u> வடஆரியர்களின் '*வர்ஞுசிரம தர்மம், சஞுதன தர்மம் ...*' என்பனவற்றை ஏற்று இந்து மதத்தில் சாதிப் பிரிவுகள் வளரவும், வலிமைப்படவும், வளமாக என்றென்றும் இருக்கவும் ஏற்பாடுகளைச் செய்துவிட்டுச்

சென்றிருக்கிருர் என்ற பேருண்மையைத்தான் அவர் நிருபருக்கு அளித்த பதில்கள் விளக்குகின்றன.

**குறிப்பு:-**

(1) சாதிகளே இல்லாத **'சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்'** அமைப்பதையே கொள்கையாகவும், குறிக்கோளாகவும் கொண்டு மனித சமுதாயத்திற்கு இந்துமதத்தை வழங்கினுர்கள் பதினெண்சித்தர்கள். அதனே பிறமண்ணினர் ஆகிய வடஆரியர்கள் மறைத்தும், குறைத்தும், மாற்றியும், திரித்தும் சாதியை வளர்த்ததால்தான் இந்துமதம் பாழ்பட்டது. எனவே, சாதிகளே ஒழித்தால்தான் இந்துமதம் மலரும், வளரும், வளப்படும், வலிமைப்படும் என்று கருத்துக் கூற விவேகானந்தருக்குத் தெரியவில்லையா? தெம்பில்லையா? துணிவில்லையா?

(2) "…..இந்துமதம் மறுமலர்ச்சியடைய வேண்டுமென்ருல் சாதிவேறுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும், சண்டைகளும் தடுக்கப் பட்டே அகற்றப்பட வேண்டும். அதற்கு ஒரே ஒரு வழி கலப்புத் திருமணம்தான்….." என்று அனைத்து இந்துமதச் சீர்திருத்தங்கள் தொன்று தொட்டு கூறி வருவது விவேகானந்தருக்குத் தெரிய வில்லையா? புரிய வில்லையா? அவரே அந்தந்தச் சாதிக்குள்தான் திருமணம் நடக்க வேண்டும் என்று கூறியிருப்பது இந்துமத வீழ்ச்சிக்கா? விழிச்சிக்கா?

**இந்துமதத் தந்தை,**
**குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
**22-3-84.**

**//மூலம்: 26.7.1984இல் வெளியாகிய குருதேவர் அறிக்கை 7.//**

# குரு பூசை விழா

ஆடியும் போனது ஆவணியும் வந்தது
குருபூசை நன்ளுளில் குவிந்தனர் பலர்.
அங்கு நடப்பதோ குருவின் நினைவு நாள்
ஆனுல் யார் நினைவுகளிலும் இல்லை குருதேவரின் நினைவு!
சித்தரடியான்கள் கூடினுர்கள் சிந்தையெல்லாம் நினைத்தார்கள்
எதை எதையோ கலந்துரையாடினுர்கள் எதைப் பற்றி?
குருதேவர் கூறிய கருத்துக்களையும் தத்துவங்களையும் அல்ல.
தரணி எல்லாம் போற்றும் எங்கள் குருவின் உத்தமரின்
நினைவு யாரிடமும் இல்லை.

ஐயனே இது என்ன? அலையலையாய் வந்து கூட்டம்
நடத்தும் மேதைகளாக சிலர் வெளிப்பார்வைக்கு பலர்
நாடகம் ஒன்று நடக்குது அங்கு
தத்துவத்தின் நாயகனின் தத்துவங்கள் இல்லை.

கருவறையின் உள்ளிருந்து காதுகொடுத்து கேட்டுக்
கொண்டிருக்கும் குருவின் நிலவறையில்
இதுபோன்று கூடி கத்துவது ஏனோ?

கருகுலத்தில் மூடப்பட்டது மந்திரக் குளம்
இதை வெளிப்படையாகக் கேட்பதற்கு
யாருக்கும் இல்லை மனம்.

அமைதியாகப் பேசுவதற்கு அடியான்கள் அங்கு இல்லை.
தெளிவாகப் பேசுவதற்கு குருதேவரின்
கருத்துக்களைத் தெளிந்தவர்கள் இல்லை.
பண்பாகப் பேசுவதற்கு பாசமுள்ள மனிதர்கள் இல்லை.

ஐந்தரத்தின் நாயகனே!
அவனி எல்லாம் போற்றும் என்
அண்ணலே! பாரம்பரியத்தை

தொகுப்பதற்கு குருவைத் தவிர யாரிடமும்
நாங்கள் கேட்பதும் இல்லை. எங்கள்
நித்திரையே போனாலும் சரி!
நிம்மதியே போனாலும் சரி!
எங்கள் குருவின் கருத்துக்களை
நிறைவேற்றியே தீருவோம்.
நிறைவேற்றியே தீருவோம்.
நிறைவேற்றியே தீருவோம்.

மண்ணில் வந்த நாயகனே!
எங்கள் மனதில் பதிந்த இறைவனே!
உங்களில் நான் என்றும்
என்னில் நீங்கள் என்றும்
எண்ணி எண்ணி எங்கள் இதயத்தில் மூச்சினிலே
உங்கள் பெயரே உச்சரித்துக்
கொண்டிருக்கிறோம் குருவே
உம்மை நினைத்து வாழ்கிறோம்.
உம் புகழ் பாடியே மகிழ்கிறோம்.
எண்ணில்லா உம் சாதனைகளை
நினைத்துப் பெருமை கொள்கிறோம்.

தமிழுக்கு உயிர் தந்தாய்
தமிழனுக்கு புது வாழ்வு தந்தாய்
தமிழை மறந்தவனுக்கு உணர வைத்தாய்
எண்ணி எண்ணி ஏங்குகிறோம்
எங்கும் உம்மைத் தேடுகிறோம்
எல்லா இடங்களிலும் பரவி
இருக்கும் எங்கள் குருவே
இந்த ஏழையின் இல்லத்தில் நிறைவாயே.

*- சித்தரின் அடியாள் சாந்தகுமாரி - ஏரிக்கரை, வியாசர்பாடி.*
*நாள்: 20-08-2015.*
*(சென்ற 2015ஆம் ஆண்டு குருபூசைக்குப் பின் எழுதப் பட்டது.)*

## குரு பாரம்பரிய வாசகம்

# இறைச்சியும் - இறைமையும்

**(இறைச்சிக் கடை - கசாப்புக் கடை)**

பதினெண்சித்தர்களின் உண்மையான இந்துமதப்படி, வழிபாடு செய்யும் போது அல்லது மற்ற சமயங்களில் பலி கொடுக்கும் போது; பலியிடுவதற்கு முன்னதாக "அனைத்தும் உயிருற்று மகிழட்டும்" என்ற வாசகத்தைக் கூறி பலி கொடுத்தல் (வியாபாரத்திற்கு அறுத்தல்) வேண்டும்.

இப்படிக் கூறுவதன் மூலம் அவ்வுயிரைப் புனிதத் தன்மை அடையச் செய்வதோடு; அதாவது அவ்வுயிருக்கு நாம் மறு பிறப்பு எடுக்க வழிவகை செய்வதோடு நாமும் நம்முடைய வாழ்வின் பயனை அடையலாம், வாழ்வின் பொருளைப் புரியலாம். நம்முடைய மறு பிறவிகளில் நாம் வளமான, செழிப்பான குடும்பத்தில் பிறந்து மகிழ்வுடன் வாழலாம்.

எனவே இ.ம.இ, அ.வி.தி ... முதலியவற்றைச் சேர்ந்த, சார்ந்த அனைவரும் உடனடியாக முழுநேர அல்லது பகுதி நேர வேலையாக அவரவர் ஊரில் "இறைச்சிக் கடை" (கசாப்புக் கடை) துவங்கிப் பயனடைக.

**- குருபாரம்பரிய வாசகம்.**

**//மூலம்: 26.10.1984இல் வெளியாகிய குருதேவர் அறிக்கை 11.//**

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் (கி.பி.785 - கி.பி.1040) சிற்பக் கலைக்கு மிகுந்த முதன்மை கொடுத்திட்டார். பல கோயில்கள், அரண்மனைகள், மாளிகைகள் கட்டுவதன் மூலம் கட்டிடக்கலைக்கும், சிற்பக்கலைக்கும் பேராதரவு நல்கினார்.



இவர் தன் காலத்து வாழ்ந்த ஒன்பது சோழ மன்னர்களின் சிலைகளையும் கருங்கல்லில் செதுக்கியுள்ளார். கருங்கல்லில் சிலைகள் செதுக்குவது, உலோகச் சிலைகளை வார்ப்பது, மண் பொம்மைகள் செய்வது பற்றி நூல்கள் எழுதியுள்ளார். இவர் காலத்தில் செய்யப்பட்ட பல ஐயனார் கோவில் குதிரைப் பொம்மைகளும், யானைப் பொம்மைகளும், முனீசுவரர் பொம்மைகளும், கிராம தேவதை சிலைகளும் இயற்கையின் வன்கரங்களை எதிர்த்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.



அம்மையப்பர்

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org**
**Email: indhuism@gmail.com**